**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.</u>**

**<u>O.S.No. 177/2022</u>**

2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 07ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் படி திரு.வினோத்குமார் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தணிகைராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | துரைசாமி | கிராமம் | : | |
| வயது | : | | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**<u>வா.சா.1 முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.

| தேதி | ஆவணங்கள் விவரம் | ஆவண எண் |
|---|---|---|
| 23.02.1959 | கிரைய பத்திரம் இணைய வழி சான்றிட்ட நகல் (கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணம் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாதது என்று ஆட்சேபனை தெரிவித்தார். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கின் தன்மை மற்றும் வழக்கின் பொருண்மைகளை பற்றியும் இந்த ஆவணம் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது பற்றியும் வழக்கின் இறுதி தீர்ப்பின் போது தீர்மானிக்கப்படும். மேற்படி ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ) | **வா.சா.ஆ. 1** |

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN
Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN